தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 9, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 22, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்”

எதிர்காலத்தில் வரக்கூடியதை முன்னரேயறிந்து தம்மைக் காக்கவல்ல அறிவுடையார்க்கு; அவர் அஞ்சி நடுங்குமாறு வரக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

[*குறிப்பு:* *ஓர் உரையின் தொடக்கத்தில்* (*) *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பெ. திருமாறன் அவர்கள் 20–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. பெ. திருமாறன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பேருந்துகளுக்கு, ஏற்கெனவே தேசியமயமாக்கப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் சம்பந்தம் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்...

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்ன இதெல்லாம் கேட்கிறீர்கள்?

திரு. எச். ராஜா: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி. அது ஆய்வில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS